# நாஸ்திகனும் ஆலங்காயும்

## சிந்தனை விருந்து - 6

நாஸ்திகன் ஒருவன் பிரயாணக் களையாற் சாலை ஓரமாக இருந்த அரச மர நீழலிற் படுத்திருந்தான். அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்த யாத்திரிகன் ஒருவனும் அம்மரத்தடியிற் தன் மூட்டை முடிச்சுகளை வைத்து இளைப்பாறினான்.

தெய்வ நம்பிக்கை அற்ற நாஸ்திகன் தன் கொள்கையை மற்ற அன்னிய மனிதனுக்கு விளக்குவதற்காகவும் தன் புத்தி கூர்மையைக் காட்டிப் பெருமைப் படுவதற்காகவுங் கதையைத் தொடக்கினான்.
"இந்தப் பெரிய ஆலமரத்தைப் படைத்த கடவுள் அதன் காய்களை எவ்வளவு சிறிதாக ஆக்கி யுள்ளார். அதோ அந்த வளவு வேலி ஓரமாக இருக்கும் சிறு அன்னாசிச் செடிக்கு எவ்வளவு பெரிய கனியைக் கொடுத்துள்ளார். இப்படிப்பட்ட முட்டாள் தனத்தைச் செய்யும் கடவுட்தன்மையை ஏற்றுக் கொள்வது ஆதாரமற்ற மூட நம்பிக்கை என்பதே என் கருத்தாகும்." என்றான்.

அதைக் கேட்ட சைவ யாத்திரி "உவன் தனக்குத் தெரிந்தபடி ஏதோ அலட்டட்டும்" என்று தன் மனதுள் நினைத்துக் கொண்டு ஒன்றுமே பேசாது தன் பிரயாணத்தைத் தொடர்வதற்காகப் பொட்டணத்தைத் தூக்கித் தோளிற் போட்டான். அச்சமயத்தில் அம்மரத்தின் உயர்க் கொம்பிலிருந்து ஒரு சிறு ஆலங்காய் படுத்திருந்த நாஸ்திகன் நெற்றிப் பொட்டிற் சரியாக விழுந்தது. அப்பாசாங்கி துடிதுடித்து எழுந்து "அட கடவுளே" என்று கத்தியபடி நெற்றியைத் துடைத்தான்.

யாத்திரிகன் சிவனின் பெருமையைச் சிந்தையல் மெச்சி;
"ஐயா சாமி! நீர் வகுத்தபடி கடவுள் செய்திருந்தால்; அந்தப் பெரிய அன்னாசிக் காய் உமது தலையில் விழுந்திருக்குமே; ஏதோ போன பிறப்பிற் புண்ணியஞ் செய்தீர் போலும் தப்பிநீர்" என்று சொல்லிக் கொண்டு தன் புனித தல பயணத்தைத் தொடர்ந்தான்.

தொகுப்பு : தனா